அம்பத்துார்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP 6/2024

(Tamil Nadu Buildings Regulation of Rights and Responsibilties of Landlords and Tenants Act, 2017, Sec.36ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்நீதிமன்றம் RLTOP வழக்கின் விசாரணை குறித்து முடிவெடுக்க O.X R.1 and 2 CPC போன்ற தரப்பினரது விசாரணை)

<u>மனுதாரர் விசாரணை</u>:–

<u>பெயர்</u> – கல்பனா

<u>தேதி</u> – 05.08.2025

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>

<u>நீதிமன்ற கேள்வி:</u>

<u>கேள்வி:</u> எனது வீட்டில் வாடகைக்கு யார் உள்ளார்

<u>பதில்:</u> முஸ்லிம் மதத்தை சார்ந்தவர் உள்ளார் பெயர் சரியாக தெரியாது.

<u>கேள்வி:</u> மனுசொத்து தொடர்பாக புதிய வாடகை சட்டம் 22.02.2019 நடைமுறைக்கு வந்தபிறகு, எதிர்மனுதாரரோடு எழுத்துப்பூர்வமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறீர்களா?

<u>பதில்:</u> வாடகை ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை.

<u>கேள்வி:</u> ஏன் எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை?

பதில்: வாடகை ரூபாய் 7000 த்தை எதிர்மனுதாரர் கொடுத்துவந்தார் நான் வாடகை தொகையை ரூபாய் 10000 ஆக கூட்டியபிறகு அவர் வாடகை தருவதை நிறுத்தி விட்டார். கடந்த 2023 ஜனவரி மாதத்தில் இருந்து வாடகை பணம் கொடுக்காததால் வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை.